**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 224/2022**

**Prosecution witness : அ.சா. 13** **Date : 27.02.2026.**

| | |
|---|---|
| **Name : Sasikala** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, Video Conference மூலமாக முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது திருப்பூர் மாவட்டம் மங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020ம் வருடம் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். காவல் உதவி ஆய்வாளர் சின்னப்பன் அவர்கள் மேட்டுர் அரசு மருத்துவமனையிலிருந்த கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த ராஜா த/பெ மாதையன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து எழுத்துமூலமாக புகார்வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப கருமலைக்கூடல் காவல் நிலைய குற்றஎண்.459/2020 ச/பி 279, 337 இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தார்.

2) பிறகு முதல்தகவல் அறிக்கை மற்றும் வழக்கு கோப்பை எனது வசம் ஒப்படைத்ததன் அடிப்படையில், நான் கடந்த 20.09.2020-ம் தேதியன்று மதியம் 1.00 மணிக்கு சம்பவயிடமான மேட்டூர் கீழ் மலை பாதை 6 வது மயில்கல் அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ரவிசந்திரன், மேகநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர்தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆகும்.**

3) பிறகு சாட்சிகள் ராஜா, நவீன், திலகவதி, கணேசன், ஆலம், பிரபாகரன், ரவிசந்திரன், மேகநாதன், மருத்துவர் சுரேந்தர், மருத்துவர் மணிமாறன், மோட்டார்

வாகன ஆய்வாளர் முரளி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சின்னப்பன், முருகவேல், தினேஷ்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முன்பாக இவ்வழக்கில் காயம்பட்ட கணேசன், ராஜா, சுகிலேஷ் ஆகியோர் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட மருத்துவர் சுரேந்தர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதியப்பட்டது. பின்னர் காயம்பட்ட சுகிலேஷ் என்பவர் 20.09.2020-ம் தேதி இறந்துவிட்டார் என்பதை மருத்துவர் சுரேந்தர் உறுதி செய்தார். இவ்வழக்கில் காயமடைந்த நவீன் என்பவர் சேலம் குறிஞ்சி மருத்துவமனையில் கடந்த 20.09.2020ம் தேதி மதியம் 02.45 மணிக்கு சேர்க்கப்பட்டு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட மருத்துவர் மணிமாறன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதியப்பட்டது. இவ்வழக்கு காயம் அடைந்த சுகிலேஷ் என்பவர் இறந்து போனதால் கடந்த 20.09.2020ம் தேதி வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவு 279, 337 லிருந்து சட்டப்பிரிவு 279, 337, 304(A) இதச பிரிவு மாறுதல் செய்து மேல் விசாரணை செய்யப்பட்டது. பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும்.

4) பின்னர் சுகிலேஷ் பிரேதத்தின் மீது இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்யப்பட்டது. **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும்.** இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் சுரேந்தர் அவர்களிடம் தலைமை காவலர் சத்தியபாமா என்பவர் மூலமாக பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு கடந்த 20.09.2020-ம் மாலை 04.00 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிறகு நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

5) விபத்தில் ஈடுபட்ட TN-93A 7255 இளகுரக வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திரு.முரளி வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளாறு அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும்.** விபத்தில் ஈடுபட்ட TN 93 A 3099 வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு

செய்ய ஆய்வாளர் திரு.முரளி வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளறு அறிக்கை அ.சா.ஆ.12. ஆகும்.** இவ்வழக்கில் மருத்துவர் சுரேந்தர் காயமடைந்த சுகிலேஷ் என்பவர் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வரும் போது விபத்து பதிவேடு பதிவு செய்தார். சுகிலேஷ் என்பவருடைய இறப்பு குறித்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.13** இவ்வழக்கில் காயம் அடைந்த நவீன் சேலம் குறிஞ்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மருத்துவர் மணிமாறன் என்பவர் சிகிச்சை அளித்தார். போலீஸ் இன்டிமேஷன் **அ.சா.ஆ.14** ஆகும். குறிஞ்சி மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு **அ.சா.ஆ.15** ஆகும். விடுவிப்பு சான்றிதழ் **அ.சா.ஆ.16** ஆகும். இவ்வழக்கில் காயமடைந்த நவீன் என்பவர் முதலில் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை மருத்துவர் சுரேந்தர் அவர்கள் செய்து விபத்து பதிவேடு தயார் செய்து பிறகு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தார். நவீன் என்பவருடைய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.17** ஆகும். இவ்வழக்கில் ஆட்டோவில் பயணம் செய்த குணா, த/பெ.அர்ஜுனன் என்பவர் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மருத்துவர் சுரேந்தர் அவர்கள் விபத்து பதிவேடு தயார் செய்தார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ–18** ஆகும்.

6) கடந்த 17.11.2020 ம் தேதி மாலை 7 மணிக்கு கருமலைக்கூடல் காவல் நிலையம் முன்பாக வைத்து கைது செய்யப்பட்டு தக்க நிலையப்பிணையில் விடுவித்தார்.

7) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 17.11.2020 –ம் தேதி ச/பி 279, 337, 304(A) இதசவிலிருந்து ச/பி 279, 337, 338 (2 எண்ணிக்கைகள்), 304(A) இதச ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ–19** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

8) இந்த வழக்கில் இறந்து போன நபர் காவல் துறையில் பணிபுரிபவரின் மகன் என்றால் ஆமாம். இந்த வழக்கில் ராஜா, குணசேகர், கணேசன் ஆகியோர் டாடா ஏஸ் வாகனத்தில் பயணம் செய்த போது எதிரே வந்த இரு சக்கர வாகனத்தில் வந்த நபர் மோதியதால் விபத்து ஏற்பட்டதாக வழக்கு அமைந்துள்ளது என்றால் ஆமாம். இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் இறந்து போனதாகவும் டாடா ஏஸ் வாகன ஓட்டுநர் குணசேகரன் என்பவர் எதிரியாக காண்பிக்கப்பட்டுள்ளார் என்றால் ஆமாம்.

9) அ.சா.1 ராஜா புகார் கொடுத்த நிலையில் எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளார் என்றால் எழுதிய பேப்பரில் தான் கையொப்பம் செய்து கொடுத்தார். அவரே எழுதி கொடுத்தார். ஆட்டோ நின்று கொண்டிருந்த போது விபத்து நடந்ததாக அ.சா. 1 சொல்லியுள்ளார் என்றால் எனது விசாரணை மற்றும் புகார் மனுவில் மேட்டூர் நோக்கி சென்று கொண்டிருந்த போது இரு சக்கர வாகனம் மோதியதால் விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளார்.

10) இந்த விபத்து எதிரே வந்த இரு சக்கர வாகனம் மோதியதால் தான் விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் ஆட்டோ வேகமாக சென்று மோதியதால் விபத்து ஏற்பட்டதாக என் விசாரணையில் சொல்லியுள்ளார். அ.சா.2 இரு சக்கர வாகனத்தில் வந்த நபரின் தவறால் விபத்து நடந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் என் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை.

11) ஆட்டோ ஓரமாக நின்ற போது இரு சக்கர வாகனத்தில் வந்த நபர் மோதி விபத்தை தேடிக் கொண்டார் என்று அ.சா.2 சொல்லியுள்ளார் என்றால் என் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை. அ.சா.2 எதிரியின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனத்திற்கு பின்னால் அமர்ந்து வந்த அ.சா.3 யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று தனக்கு

தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் ஆட்டோ ஓட்டுநரின் தவறால் தான் விபத்து நடந்ததாக என் விசாரணையில் சொல்லியுள்ளார்.

12) அ.சா.3 விபத்திற்கு பிறகு தனக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றும் எதிரியை பார்க்கவில்லை என சொல்லியுள்ளார் என்றால் என் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை. அ.சா.3 போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என சொல்லியுள்ளார் என்றால் விசாரித்தேன். இந்த விபத்து முழுக்க முழுக்க இரு சக்கர வாகன ஓட்டுநர் தவறால் நடந்தது என்றும் அடிப்பட்டவருக்கு இழப்பீடு பெற்றுத் தரவேண்டி பொய்யாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னமாதிரி, சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில், சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் சம்பவயிடம் செல்லாமல் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

(இவ்வழக்கின் சாட்சி காவல் ஆய்வாளர் சசிகலா அவர்கள் இன்றையதினம் Video conference மூலமாக ஆஜராகி சாட்சியம் அளித்த பின்னிட்டு அதன் நகலை PDF வாயிலாக நீதிமன்ற e-mail மூலமாக காவல் ஆய்வாளர் சசிகலா அவருடைய E-Mail முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதனை பதிவிறக்கம் செய்ய உத்தரவிடப்பட்டு பின்னிட்டு கையொப்பம் செய்து பதிவு தபால் மூலமாக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. அதன் நகல் பதிவிறக்கம் செய்ததை வழக்கு கோப்பில் வைக்கவும் உத்தரவிடப்படுகிறது.)

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**